# பத்ரி உரையாடல்!

## தை வருடப் பிறப்பு!

## ஜனவரி, 2010

## இதழ் 1





பூஜ்யஸ்ரீ சத்குரு தூளி பாபா



# பக்தி

உரையாடல்!

தை வருஷப் பிறப்பு!


ஜனவரி, 2010

இதழ் 1

# பொருளடக்கம்

1. முகவுரை----------------------------------------------------------2
2. பிரம்மம் ஸத்தியம் ஜகத் மித்தை--------------------------------7
3. சேவையும் ஆசியும் --------------------------------------------45

எல்லாம் நீ!



ஸத்திய வாக்கை

ஸத்தியம் பேசு.
தர்மம் செய்.
நாவை அடக்கு.
கருணையோடு இரு.

ஸத்தியம் பேசினால், தர்மம் நிலைபெறும்

# ஸ்ரீராமகுரு கீதை தன்னை!
# நம்பினோர் கெடுவதில்லை!
# தெய்வம் மறையாலும்!
# யத் பாவம் தத் பவதி!
# ஸ்ரீராம் ஜெயராம் ஜெயஜெயராம்!

ௐ!

அகம் பிரம்மம், ஜெகம் பிரம்மம்,
அகமே எல்லாம்!
ஜெகம், பரமும், ஜீவர்களும்,
சிறிதும் இல்லை!



உ

பக்தியில்! நடந்த சில ஸத்தான! உரையாடல்கள்.


# முகவுரை

ஓம் ஆத்மானந்த குழந்தைகளே!

மனோநலனும்! ஆத்மசுகமும்! பெற வாழ்ந்திருக்கும்.
ஜீவகர்த்தத்துவம்! அழிந்தால், மனோநலம் பெறமுடியும்
ஈசகர்த்தத்துவம்! அழிந்தால், ஆத்மசுகம் பெறமுடியும்
ஜீவகர்த்தத்துவம் என்றால், நான்! என்னுடைய! எனது!
ஆகும். ஈசகர்த்தத்துவம் என்றால், ஓர் நாம ரூப,
ஸ்ரீ பகவானிடம்! எல்லாம் நீயே! எல்லாம் உன்னால்!
எல்லாம் உனதே! எனவிடும், சர்வார்ப்பணம் ஆகும்.
முந்தையது, மனோ மய பந்தம் ஆகும்.
பிந்தையது, மாயாவின் மயக்கம் ஆகும்.
மேலே கூறிய இவ்விரண்டும், அழிந்து நாசம்
ஆக வேண்டுமானால், ஸத்குருநாதன்! அருளும்
எல்லாம் ஒன்றே! அது சிவமே! அது நானே! நானே அது
என்ற, பிரம்மார்ப்பணம்! ஒன்றால்தான் முடியும்.

முகவுரை






நாமரூப குண தோஷங்களை, நாசம் செய்வதும், வினைகளை பரிபாகப் படுத்துவதும், ஓர் ஸ்ரீபகவானிடம் சர்வார்ப்பணம் செய்வதாகும்.

மாயாவின் (ஸ்ரீபகவானின்) மயக்கத்தைப் போக்கி, வினையை நாசம் செய்வது பிரம்மார்ப்பணம் ஆகும்.

மனோவியாதி என்பது, ஜீவகர்த்தத்துவத்தால் விளைந்த, தோஷ குண, எண்ணங்கள் ஆகும். அவ்வியாதி ஸ்ரீபகவானிடம் செய்யும், சர்வார்ப்பணம் என்ற, மருந்தால் மட்டுமே, குணமாகுமேயன்றி, வேறு எந்த மார்க்கத்தாலும், அம்மனோவியாதியானது குணம் ஆகாது. மனோவியாதி நீங்கி, மனோநலம் பெறும் போது, வினையும் பரிபாகப்பட்டுவிடுகிறது என்றும் உணர வேண்டும்.

குறிப்பு :- வினை இங்கு அழியவில்லை. வினை இருக்கு பாசப்பசை, உலர்ந்து, சாம்பல் ஆவதற்கு, தயார் நிலையில், உள்ளது என உணர வேண்டும்.

ஆத்மசுகம் என்பது, ஆன்மா சுகவீனன் அல்லன் என்பதே ஸத்தியம். அப்படியானால், ஆன்மசுகம் எதைக் குறிக்கிறது என்றால்? ஆன்மா என்பது, ஸ்வயம் ஜோதியான சைதன்யம் ஆகும். ஜீவபோர்வையாகிய, ஜீவகர்த்தத்துவம் (மனதின் திரை) ஆன்மாவை, மூடியிருப்பதுவே, ஆன்மா



இந்த சரீவார்ப்பணத்தால்! (4)
மனம் பரிமாகப்
பட்டாவிதான்;
ஸ்ரீ ஸத் குரு! அருளும்
பிரம்மார்ப்பணமும்!
பாவனையால் மனோநாச
மும். அத்வைதம் என்ற, ஜீவன் முக்தியும்
பெற முடியும்.

சுகவீனன் என்று, பேசப்படுகிறதேயன்றி உண்மை அல்ல. பந்தமற்ற ஆன்மாவை பந்தப்பட்ட ஜீவான்மாவாக, கருதி பேசப் படுவது, அறியாமையின் மாந்தர்களின்

மனக் கணிப்பு ஆகும்.


ஆகவே?

ஆன்மா! சுகம் அடையும் நிலை என்பது:-
எந்த மனமானது, நான் ஓர் பந்த ஜீவன் என, எண்ணி மதி மயங்கி இருந்ததோ! அதே மனம்! இயக்கம் உற்ற நிலையில், யாம் அறிவு சொரூபமாகிய, ஸ்ரீ பகவான்! என்றும் (இது

விசிஷ்டாத்வைதம்!

ஆகும்) இயக்கம் அற்ற நிலையில், யாம் ஆத்மாவும்! பரமாத்மாவும்! பரம்பொருள் காலாதீத பர சொரூபமும்! ஆவோம்! என

# முகவுரை




எல்லாம் நீயே! (ஞ)

என்பது, நாம ரூபம் உள்ள, ஓர் ஸ்ரீமகவானை குறிப்பதால், அது விசிஷ்டாத்வைதம் ஆகும். எல்லாம் ஒன்றே என்பது நாம ரூப குணம் கடந்த நிலையில் பரந்தோறு/நம்மை இணைப்பதால் அது அத்வைதம் ஆகும் என உணர வேண்டும்.

பேரறிவுடன்! நிலைத்து நின்று விட்டால், அதுவே, ஆன்மா சுகம் பெற்ற நிலையாகும். அங்கு மனம், மறைந்தான நிலையாகும். அதுவே, மனம்! அறிவாகும் நிலையாகும். அதுவே, மனோ நாசமான நிலையாகும். இங்கு ஸத்குரு அருளும், அகண்டான்ம நிலை பெற்று விட்டால், அதுவே, பேரறிவின் நிலையாகும். இதுவே

அ த் வை த நிலையாகும்.

இதிலிருந்து, என்ன உணர்கிறோம் என்றால்? மனோநாசம்! பெறாமல் ஆன்ம சுகம் பெற முடியாது, என்பது, உறுதியாக, உணர்த்தப் படுகிறது. ஜீவகர்த்தத்துவம்! என்பது மனமய கற்பனையாகும். ஈசகர்த்தத்துவம்! அறிவின் உறுதி நிச்சயம் ஆகும். இவ்விரண்டும்! அழிந்தால் மட்டும் பேரறிவு சித்தித்து, ஜீவன்முக்தி பெற முடியும்! என்பது ஸத்தியமாகும்.



சென்ற முறை (6)
நடந்த மூன்று
ஸத்ஸங்கங்களிலும்
நூற்றுக்கணக்கா
னோர் பயன் பெற்றனர்
நூற்றுக் கணக்கானோர்
பயிற்சி செய்து கொண்
டிருக்கின்றனர். அனேகர் ஜீவன்முக்தி
த்துரிய, ஜனனம் எடுக்க ஆயத்தமாயினர்.

இம்முறை, ஸ்ரீ பத்ரிநாத் யாத்திரையில்,
அனேகர் கூடிய நிலையில், தனித்த இடத்தில்,
ஸத் ஸங்கம் நடைபெறவில்லை ஆனால்,
சிவ சிவ மௌனத்மாக்கள் ஆங்காங்கு
இரண்டிலிருந்து, ஐந்து பேருக்கு குறையாமல்,
கேள்வி பதிலாக அனேக விளக்கம் பெற்றனர்.
அவையெல்லாம், சென்ற முறை நடந்த
மூன்று ஸத்ஸங்க மடல்களிலும் மேலும்
பலமடல்களிலும், வெளி வந்த படியால்,
அனைத்தையும், எழுத தேவையில்லையென்பது
அவன் கணிப்பாகும். ஆகவே, சிவ முக்தியின்
கருத்துக்களை மட்டும், தருகிறோம். இவைகள்
பாடம் படிப்பாக படிக்காமல் அனுபவ
அறிவாக உரையும் அதுவே நாம் என ஆருக
என ஆசிர்வதிக்கிறோம்.

பாபா.



போதனை என்றால்? வாக்கும் வழியும் அடங்கும். போதம் ஸ்ரீபரமாத்ம நிலை ஆகும். அதாவது ஜீவ கர்த்தத்துவம் நாசமாகி, ஏக கர்த்தத்துவம் பெறும் நிலையாகும்.


1

## பிரம்மம் ஸத்யம்! ஜகத் மித்தை!!

அன்பர்:— ஆமாம் பாபா! உங்கள் வாக்கிலே அடிக்கொருதரம், குருதேவா! குருநாதா! என்ற ஒலி வருகிறது. இந்த நாமா/அவஸ்யம் தேவைதான். தாங்களோ சுத்த அத்வைதி! ஆனால் ஸ்ரீபகவன் நாமாக்களும் (கிருஷ்ணா! ராம்! நாராயணா!) அடிக்கடி வருகிறதே. இதன் காரணம் என்ன? அத்வைதிகள்! நாம ரூப, ஜக ஜீவ, ஈஸ்வராதிகள்! அனைத்தையும், முழுமையாக கெடுத்தால்தான், அந்நிலை பெற முடியும். ஆனால், உங்களை எப்படி எடுத்துக் கொள்வது என்றே, புரியவில்லை? ஆனாலும், தாங்கள் மடல்களிலும், நாம ரூப, ஸ்ரீபகவானுக்கு! முக்கியத்துவம் கொடுத்து, சர்வார்ப்பணத்தை! அதிக வலியுறுத்துகிறீர்கள்.

சாதனை : நடை / உடை / பாவனை.
போதகம் = ஒழுக்கம்
யோகம் = ஆசை





சாதனை என்றால் (8)
பிரம்மார்ப்பண
நிலையே முன்னும்!
பின்னும்! அரவணைத்து
ஆட்படுத்தி கொள்கிறது
அதாவது மண்பாண்ட
மாக நாமரூபமாக
காணும் அனைத்துமே மண் என உணருங்கள்
என்பதே முடிந்த முடிவாகிறது.

ஆனால் ஸ்ரீபகவானின்/ நாமரூப, பிரேமையை, வலியுறுத்த வில்லை என்பதையும் அறிகிறோம்:


(A) நாங்கள் யோகனி/ துவைதமாக தோன்றுகிறது.
(B) ,, போதகம்/ விஷிஸ்டாத்வைதமாக தோன்றுகிறது.
(C) ,, சாதனி/ அத்வைதமாக தோன்றுகிறது.

இதில், எம் கேள்வி என்னவென்றால்?

(1) ஓர் நாமரூப பகவானி/ எண்ணமல் ஆத்ம ஞான சாதனை பண்ண முடியாதா? பண்ணக் கூடாதா?

(2) ஸ்ரீபகவான்/ காட்சி கண்ட பிறகுதான், அத்வைத நிலை/ பெற முடியுமா?

(3) நாமரூப ஜகத்திற்கும்! காலாதீத பரத்திற்கும் ஒற்றுமை! வேற்றுமை என்ன? இதன் காரணம்:-
நாமரூபம் தானே, அந்த நடையாக சொல்லப்படுகிறது.
ஆகவே?



இந்த தபோவனம் 9

என்பது பத்ரி யிலிருந்து, கேதார்நாத்திற்கு நேர் வழியில், பனிபடர்ந்த காட்டில் இருக்கிறது. இந்த தபோவனம் இரண்டொரு மாதமே பனியில்லாமல் இருக்கும். மற்றைய காலங்களில், பனி மூடியே இருக்கும்.

நாமரூபம் வந்த விதம் என்ன? அந்த நாமரூபம் அழியும் அழிக்கும் நிலை என்ன?

இம் மூன்று கேள்விகளுக்கும், முறையோடு, எளிய முறையில், விடையளியுங்கள் பாமா? என அங்கு இருந்த இருவர் சார்பிலும்! ஒருவரே இந்த கேள்விகளை கேட்டார்.

எம் ஆத்மானந்த குழந்தைகளே!


இந்த கேள்விகளை, கேட்ட மூவரும், தூலசொரூபிகளோ அம் மூவரும், யோக புருஷர்களோ. காலங்களை கீகில், பலபல ஆயிரம் வயதுடையவர்களாகும் அம் மூவரும், தபோவனம்! என்ற இடத்திற்கு, குகை மார்க்கமாக, இவ்வேளையை கொண்டு சென்றார்கள் என உரைவும். மற்றும் விபரம் தெரியவும் வேண்டாம். தேவையும் இல்லை. இனி அம்மூன்று கேள்விகளுக்கும் விடையை காண்க.



இங்கு சென்ற 10
அன்புதாஸ்,
அதிகாலை 3 - 30
திருஎழுந்து காலைக்
கடன் செய்து முடி
த்தல், வைத்தியம்.
அன்று காலை 4 - 30
வரையிலும் எழுதல்.
அன்று நம் பிரம்மச்சாரிகள் இதை
எழுப்ப கடும் பிரயத்தனம் பட்டது போதுமா?

1 முதல் கேள்வி:— ஒர் நாம ரூபமுள்ள, ஸ்ரீ பகவானின் எண்ணமால், (ஸ்ரீ பகவான் சகாய மில்லாமல்) ஆத்ம ஞான சாதனை பண்ண முடியாதா? ஞான சாதனை பண்ணக் கூடாதா??

வைத்தியம் :— நாம் அன்பான மனுஷ்யாத்மாக்களே! மற்றைய மூன்று யுகங்களிலும், ஸ்ரீ பகவான் அனைவரிடமும் சமமாகவும்! சகஜமாகவும்! மனத்திரை மறைப்பில்லாமலும்! பிரத்தியட்சமாய்! பிரசன்னமானவன். (காட்சி ஆவான்) என்பதை விட, நம்மைப் பெற்ற ஸ்ரீமாதா! ஸ்ரீபிதா போல்! அப்போதைக்கப்போது எளிதில் எளிமையாகவும், தோன்றுவான். ஆகவே, மாயாவின் மயக்கமும் அதிகம் இல்லை. மனத்தின் வக்ர குணங்களும் மனிதனை பாதிக்கவில்லை.




ஆகவே நாமரூபமுள்ள, ஸ்ரீ பகவானின் / வலிய
அழைக்கும், நிலை இல்லாதிருந்தது. காரணம்
அறியவே பிரகாசித்தது. ஆகவே அங்கு மனம்
இருந்தாலும், இருளாக இல்லாமல், அருளாகவே
ஸ்வபாவமாக இருந்தது. ஆகவே அக்காலங்களில்,
ஸ்ரீ பகவானின் / சகாயம் என்பது தேவையில்லா
மல், இயல்பாகவே / இயற்கையாகவே / இருந்தது.

ஆனால்?

இன்றைய கலியுகத்தில், ஒரு நூறு வருஷ
ங்களுக்கு முன், கலிதோஷம் அதிகம் இல்லை.
” பின் கலிதோஷம் கடுமையாக உள்ளது.
அக்கலி தோஷ ஆக்ரமிப்பு எப்படி என்றால்???


(A) நான் / என்னால் / எனது / என்ற, ஆகாமிய கர்மாவும்.
(B) உறவு / சுற்றம் / நட்பு என்ற பாசப் பிணைப்பிலும்,
(C) படிப்பு / பட்டம் / பதவி / அந்தஸ்து / புகழ் / கீர்த்தி / களின், போட்டி பொறாமையிலும்.



அந்த மந்தம் (12)
என்ற அஜீரணம்!
சர்வார்ப்பணம்!
என்ற மருந்தால்
தான் தீரும் - எப்படி
என்றால், இந்த மனம்
புத்த நாம ரூப புசிப்பா
பாதை மாயானவை உடைய ஸ்ரீமகவானுடை
யதாரும். அவன் பொருளே,

(D) தெய்வ பக்தி என்னும், ஆன்மீகமானது,
வியாபார! விளம்பர! ஆடம்பரம்! ஆனதாலும்.

(E) பக்தர்களிம் போலும்! ஞானிகளிம் போலும்!
சாதனை செய்பவர்களிம் போலும்! இருப்பவர்களிடம்
கலியின் பிரதான குணமான! காம & காஞ்சனம்!
பணம் & ஆடவர் பெண்டிர் விஷய ஆசைகள்
மறைமுகமாகவும்! அதேநேரம் பலமாகவும்!
பற்றிக் கொண்ட தன்மையாலும். இன்னும்
வரும் காலம்! நாகரீகம் என்ற போர்வையை
போர்த்திக் கொண்டு, அழிவு பாதையை நோக்கி,
கலியின் குணங்கள்! வேகமாக இழுத்துச்
செல்வதனாலும், பக்தியை விரும்பினாலும்!
பரமுக்தியை விரும்பினாலும்! நாம ரூப
ஓர் ஸ்ரீமகவானின்! தயவு அவஸ்யம் தேவை.
ஸ்ரீமகவானின்! சகாயம் இல்லாமல், லௌகீகமும்!
தெய்வீகமும்! அவஸ்யம் பயன்படாது. நிச்சயம்.



நான் எனது என்ற, (13)
அஹங்காரம்
மமகாரம்! கொண்
டு புத்திகளால்,
வந்த உபாதையால்
இதை ஜனன
மரணம்! என்று சொல்லும்
பிறவிப் பிணியாகும். இங்கு நான் என்றால்
என்னை முழுமையாக கெடுத்து

ஆத்ம ஞான சாதனை செய்து, ஜீவன் முக்தியை
நாடுபவர்களும், ஸ்ரீ பகவான்! கிருபையை
பெறாமல், ஜீவன் முக்தி பெற முடியாது.
இச்ஜீவன்! அறியாமையினால் தேடிய,
ஜீவபுசிப்பாகிய, வினைகள், உவர்ந்துவது,
ஸ்ரீ பகவானின்! சர்வார்ப்பணம் ஆகும்.
உவர்ந்த வினைகள், எரிந்து பஸ்மமாகிவிடுது
ஸ்ரீ ஸத்குரு அருளும் பிரம்மார்ப்பணம் ஆகும்.
என உணர்ந்தால் போதும். வினை உவராமல்
அத்வைத ஞானத்தால், எரிக்க முடியாது.
ஆன்ம ஞான சாதனை பண்ண முடியாதா?
பண்ணக் கூடாதா?? என்ற கேள்விக்குப் பதில்
அப்படி செய்தால், அனுபவ ஞானம் ஆகாது.
வேத, வேதாந்த, சாஸ்திர வாய் ஞானமாக
இருக்கும் என, ஸ்ரீ மஹான்களின் கருத்தாகும்
என, இக்கேள்வியை நிறைவு செய்கிறேன்.




எல்லாம் நீயே
,, உன்னில் (14)
,, உனதே.
என மனதார மொழி
த்து விட்டால், இப்
பிறவி நோய் நீங்
குமேயன்றி வேறு
எந்த மருந்தும் பயன்
தராது என்பதே ஆதிஸ்ரீமஹான்
களின் அனுபவ கருத்தாகும்.

(௨)

இரண்டாவது கேள்வி :— ஸ்ரீ பகவானின், காட்சி கண்ட பிறகுதான் அத்வைத ஞானம் பெற முடியுமா?


வைத்தியம் :— இதில் முக்கியமான ஒன்றை உணர வேண்டும். அதாவது?

(A) தெய்வம் மனுஷ்யாளும், என்றும், தெய்வம் தோன்றத (தோற்றத்) துணையன், என்றும், இக்கவியகத்திற்காகவே, ஸ்ரீமஹான்களால், அனுபவ நிலையில் கூறப்பட்டிருக்கிறது. அதாவது இதன்பொருள் இக்கவியில் தெய்வம் நேரில் தோன்றக் கூடாது என்றும், தோன்ற முடியாது என்றும் ஆதிஸ்ரீமஹான்களால் கூறப்பட்டிருக்கிற படியால், சர்வார்ப்பணம் என்ற ஓர் ஸத்திய வாக்கை, வைத்துக் கொண்டு நாமரூபமாக காணும், அந்த ஜீவர்களையும்,



ஸ்ரீ ஸத்குரு
அருளும் (15)
பிரம்மார்ப்பணம்
எப்படி வாங்கு-
கிறது என்றால்,
மண் இல்லாமல்
நாமரூப பாண்டங்கள்
இல்லவே இல்லை. அதேபோல் தன்மை
யான மண்ணில் நாமரூப பாண்டங்கள்
இல்லை.

மனித இனம் உட்பட, அனந்த ஜீவ கோடிக-
ளிலும்
ஒவ்வொரு வேஷம் போட்டுக் கொண்டு
அவரவர்க்கு அதனதன்! புண்ணிய பாப
வினைக் கேற்ப, ஸ்ரீ பகவானே! விதி என்ற
சூஸ்திரக் கயிற்றால், ஆடிக் களிக்கிறான்
என்றும், அதனால் வினைகள் ஆடிக் கழிகின்றன
என்றும், இதில் பாரபக்ஷ தோஷம் இல்லை
என்றும், இங்கு இந்த ஜீவன் நான் என
எண்ணினால், வினை தொடர்கிறது என்றும்,
ஜீவன் நான் அல்ல. எல்லாம் ஸ்ரீ பகவானே!
என ஸத்தியமாக உணர்ந்து விட்டால், அங்கு
வினை முடிவடைகிறது என்றும். எல்லாம் நீயே!
என்ற சர்வார்ப்பணத்தால்! ஜீவகர்த்தத்துவம்!
அழிந்த தன்மையினால், வேறு எந்த கடின




அதேபோல் காலாதீத பரம்! (16)
இல்லாமல் நாம
ரூப ஜகஜீவ உறவு
சுற்றம்! நட்பு! பெண்
பொருள்! போகம்!
இல்லவே இல்லை. அதைப்
போலவே, ஒன்றும் இல்லாத பரத்தில் இந்த
நாம ரூப, ஜக ஜீவ தோற்றம் இல்லவே இல்லை.

பயிற்சி & முயற்சி! இல்லாமலேயே.
ஸ்ரீ பகவத் சொரூப! சாக்ஷாத்கார நிலை
பெற்றுவிடலாம் என, ஆதி ஸ்ரீ மஹான்களின்!
அனுபவ வாக்கு இருக்கிறது.

(B) தோன்றுந்துணைவன்! என்ற நிலையிலும்;
தெய்வம் மனுஷ்யாளும்! " " ?


ஓர் மகத்தான உண்மை மறைந்திருக்கிறது.
அது யாதெனில்:- தெய்வம் மாயாவால்
தன்னை மறைக்க வில்லை! என்பதே ஸத்தியம்.
மனத்திரையே! தெய்வத்தை! நேரில்
காண முடியாமல் மறைக்கிறது! என்பதே ஸத்தியம்.
அம்மனத்திரை என்பது, ஜீவகர்த்தத்துவமே.
அந்த ஜீவகர்த்தத்துவம் என்பது:- நான்! என்றும்
எனது! என்ற அஹங்கார, அதிகார, ஆதிக்க!



நாமரூப ஜகத்
ஜீவ தோற்ற (17)
த்தை உண்டு
என்மனம் எண்ணி
னால் அவஸ்யம்
கற்பனை நிலையில் உண்டு

ஏன் அப்படி சொல்கிறேன் என்றால் எந்த நாமரூபமும் நிலையாய் இருப்பதில்லை.

அபிமான வெறியும்! உறவு சுற்றங்களின்!
ஸ்ரீபகவானை காணும், அன்பை பெருமையும்,
சொந்த, பந்த, பாச, பற்றின்
உறவாக பேசியும், கண்டும், கேட்டும், அதை
உண்மையாக நம்பும், பாசமும் ஆகும்.
இந்த பாசப் பசையும்! அஹங்கார மமகாரமும்!
ஒழிந்து நாசமான, மறு பிறவியே
உன் எந்த உபாசனா மூர்த்தியானாலும்,
அச்சுதனையே, நேருக்கு நேராக தரிசிக்கலாம்.
பேசலாம்! கொஞ்சலாம்! குலாவலாம்!
விளையாடலாம்! பேரானந்தத்தில் மூழ்கலாம்.
மாயா :- இவ்வாறதை, உண்டுபண்ணுவதும்.
பழையதை புதுப்பிக்கும் நிலையில், இருப்பதை
அழித்து, புதிய தோற்றத்தை உண்டுபண்ணுவதாகவும்
இப்படி அழிப்பதை, சம்ஹாரம் என, பேசப்படுகிறது.




மாறும்! மறையும்!
நிலையான எந்த
நாம ரூப முமே
இவ்வுலகிலே இல்லை.
ஆகவே நாம ரூபம்
இல்லையென்றே சொல்
லலாம். ஆனால்
இருப்பு என்பது தோற்றம் ஒன்றே.
தோற்றத்தில், எந்த நாமரூபமும் இல்லை.

நாமரூபம் மனகற்பனையில் உண்டு ஆனால் உண்மையில் இல்லை


ஆகவேதான், நாமரூப ஆகத்திற்கு,
தோற்றம்! இருப்பு! மாற்றம்! மறைவு! என
ஸ்ரீமஹான்களால் பேசப்படுகிறது.

மனம் :- மாயாவின் மைந்தனே (மறுவடிவம்) மனமாகும். மாயாவின் தோற்றத்தை, ஸங்கல்ப விகல்ப (தோற்றம் குறை கற்பனையால்) நாமரூபங்களாய் உண்டுபண்ணுவதும், அவைகளை, தாம் தோன்றிய, ஜீவகர்த்தத்தி வர்த்தாவி/விரியாருவதும் மனதின் செயலாகும்.

இம்மனதிற்கு, சர்ப்பம் தோற்றும் வரை கயிறு தோற்றாது. கயிறு தோற்றும் வரை, சர்ப்பம் தோற்றாது. அதாவது, ஒன்று தோற்றும் வரை, மற்றொன்று தோற்றாது! என்பது எப்படி ஸத்தியமோ! அதே போல். நாமரூப, விபரீத, விசித்திர காட்சி, தோற்றும் வரை, ஸ்ரீபகவான் தோற்ற இயலாது.




இதனைத்தான், அனுபவ ஞானிகளின் வாக்கானது,
யத் பாவம் தத் பவதி! என்றார்கள்.
ஆகவே, உலக நாமரூப, இன்ப துன்பம்!
தோற்றம் வரை, ஸ்ரீ பகவான் காட்சியை,
பெறமுடியாது என்பது ஸத்தியமே. ஆகவே
உடல் உலக, நாமரூப காட்சியை, ஒழித்து!
எல்லாம் அவன் இருப்பே! அவன் இயக்கமே! அவன்
பொருளே! என மாற்றிப் பழகிக் கொண்டால்
அதுவே, ஸ்ரீ பகவானை, நேருக்கு நேராக,
காணும் நிலையாகும். இவ்வனுபவம் பெற்று
விட்டோம் என்றால், நாமரூப பேதம் தோற்
றாது. அதனால் நாமரூப, விருப்பு வெறுப்பு தோன்றாது
அதனால் நாமரூப குற்றம் குறை/குண தோஷம்
சர்வநாசம் ஆகும். இந்நிலை பெற்றவே,
அது ஸ்ரீ பகவானை காணும் நிலையாகும்.




நாமரூப மயக்க
குண பேதம் (20)
நாசமாகவே, உன்
உபாசனை மூர்த்தியான
ஸ்ரீபகவானுடன்
நேருக்கு நேராக பேசலாம்
உரையாடலாம் உறவாடலாம்
இது இந்த ஏழை வைத்தியர்க்கு, அவன்
அருளால், கிடைத்த ஈஸ்வரப்பிரசாதமாகும்.

இப்படி ஸ்ரீபகவானை கண்ட நிலையில்:
எல்லாம் நீயே! என்ற விசிஷ்டாத்வைதம்!
இயல்பாக ஸாத்தியமாகும்.
இது ஸாத்தியமான மறு வினாடி, ஸத்குரு
அருளால், எல்லாம் ஒன்றே! அது சிவமே!
அது யானே/யானே அது! என்ற சுத்த
அத்வைதம்! இயல்பாகவே ஸாத்தியமாகும்.

(3) மூன்றாவது கேள்வி:- நாமரூப ஜகத்திற்கும்!
நாமாதீத பரத்திற்கும் ஒற்றுமை! வேற்றுமை!
என்ன? இதன் காரணம்?
நாமரூபம் தானே, அங்கு தடையாக சொல்லப்
படுகிறது.
ஆகவே?


(A) நாமரூபம்! வந்த விதம் என்ன?
(B) வந்த நாமரூபம்! அழியும் அழிக்கும்!
வழி என்ன?



அம்மாயாவை
ஜீவம் என்றும்
உள்சுத்தியல் என்றும்
நீயே கண்டு சொல்லலாம்.

இந்த ஏழை வைத்தி
யந்திடம் (உ)
குருதேவா!
குருநாதா!
என ஒலி வருவது
பர ஒலியாகும்.
மற்றும் வரும் எந்த
ஸ்ரீமகவந்நாமாவும்
இறை ஒலி ஆகும். இவ்விரண்டும், இயல்
பாகவே நாமே ஒலிப்பவையாகும்.

வைத்தியம் — (A) காலாதீத பர சொரூபம்
என்றும், அது எம்பிர யோஜனமும், இல்லாத
வெறும் மண்! என உதாரணமாக கொள்ளலாம்.
(B) அப்பர சொரூபமே! விளையாடும் நிமித்தமாக
தம்முடைய நிழலை (மாயாவை) தோற்றுவித்துக்
கொண்டது. அந்த நிழலே! ஜீவம் ஆகும்.
இப்போது அம்மண்ணும்! இச் ஜீவமும்!
இணைந்து, பிணைந்த, (பிசைந்த) தன்மையால்,
நாமரூபம் உண்டாக்கத்தக்க, களிமண்!
என ஆனது என, கொள்ள வேண்டும்.
முந்தையது வெறும் தோற்றம் ஆகும்.
பிந்தையது இணைந்து பிணைந்த தோற்றம் ஆகும்.
ஆனால் இரண்டும் தோற்றம்!
மாத்திரமேயாகும். (இங்கு நாமரூபம் இல்லை)



பர ஒலி ஒலிக்கும் போது, யாம் (22) பேரறிவாக இருக்கிறோம் என அறிக. இறை ஒலி ஒலிக்கும் போது, யாம் அறிவு சொரூபமாக இருக்கிறோம் என அறிக. அவை எம் உடன் இருந்து பார்ப்பவர்களுக்கும்.

தாவரங்கள் ஓர் தோற்றமும்! இருக்கிறோம் என்ற ஓர் இருப்பு மட்டும் உடையதாகும்.

## தோற்றம் பற்றிய ஓர் விளக்கம்.

அன்பும்! அறிவும்! நிறைந்த குழந்தைகளே!

தோற்றம்! என்றால், ஏதோ ஓர் தோற்றமும்! அதன் இருப்பும் (மட்டும்) உடையதாகும் என உணர்க.

அங்கு எந்த, நாமரூபமும்! இல்லாததாகும்.


அதாவது, அத் தோற்றத்தின் பின் விளையும்! (உண்டாகும்) எந்த ரூபமும்! எந்த நாமமும்!

அல்லது, எந்த நாமமும்! அதற்கேற்ற ரூபமும்!

இல்லாத அதன்பேதமும்! வெறும் தோற்றம் மட்டும் ஆகும்.


உதாரணம்:- பிருதிவி (மண் அமைவு) ஜவம்

தாவரங்கள் (இவைகள், ஓர் அறிவுள்ள, அதாவது வளர்ச்சி மட்டுமே உடையதான, ஓர் உயிரினமாக இருந்தாலும், சஞ்சாரம் இல்லை)



அவ்வொலிகின கேட்பவர்க (23)
ளுக்கும்! எம்மாய்
அசையை வைத்து
யாமே புலம்புவதாக
தோற்றும். ஆனால்
அங்கு யாம் புலம்புவதில்லை
அது பிரம்ம ரகஸ்யமாகவும்! தேவரகஸ்யமாகவும்!

ஆகிய இம்மூன்றையும், இயற்கையின் நியதியில்,
தோற்றம்! என்று ஒன்றுமட்டும் உடையது
என சொல்வவாம். பின் இவை மூன்றும், மனதால்!
மனதின் கற்பனையால் ஆசை & தேவை!
தேவை & ஆசை! என்ற நியதியால் பற்பல
வடிவம் பெறச் செய்கிறது, இந்த மனம்.
இவைகளே நாம ரூபம்! என்று பேசப்படுகிறது.
அவைகள்:- வீடு! பண்டம்! பதார்த்தம் பாத்திரம்! மற்றும்
அனைத்து உபயோக பொருட்களும், மனதால்
உண்டாக்கப்பட்டன. நாமே உண்டாகவில்லை.
மேலே சொன்ன மூன்றும், தோற்றம் என சொல்வவாம்.
நீயே கண்ட அனைத்தும், அதன் நாமரூபம் ஆகும்.




பாதுகாக்கப்பட்டு
வருகிறது என் ஓம்
பதேஸ்வரியம்.
இயக்கம் அற்ற நிலை
யில், யாம் பரமாகவும்
இயக்கம் உற்ற நிலை
யில், யாம் ஸ்ரீ பகவான்
ஆகவும் இருக்கிறேம்.
என்பதை, உணர்ந்த மெய் அன்பர்களால்
இந்த ரகஸ்யத்தை உணர முடியும்.

மேலே கூறிய, மூன்றின் நிலை தோற்றங்களும்!
மனதின், தேவை & ஆசை! ஆசை & தேவை!
என்ற எண்ணத்தால், தோன்றும்! மாறும்! மறையும்!
இதில், நாமரூப! மோஹம் கொண்ட மனம்,
தம் எண்ண குண தோஷங்களால், வினையை
சொந்தம் கொண்டாடி
பெருக்கிக் கொள்கிறது. அதுவே பிறவி நோய்!
என ஆகி விடுகிறது.

இதை சித்தரிக்கும் நிலையில், ஓர் அன்பர்
எப்படி பாடுகிறார் என்றால்?


மாயை என்ற ஒருத்தி தன்யாலே,
மனம் என்ற மைந்தன் தோன்றி,
தூய நல்வழியின் தன்பால் தோற்றம்,
உண்டாக்கி வைத்தான். என்றார்.

இப்பாடலின் உண்மை பொருளை, சற்று
உள் ஆழ்ந்து, நோக்க வேண்டும்.



மெய் அன்பு (25)
இல்லாமல்
நாமரூப மாகக்
கொண்டவர்
களுக்கு இந்த ரக
ஸ்யார்த்தங்கள் /
புரியாது. சற்று குழப்ப
மாகவே தோன்றும்.
காலப் போக்கில், அனுபவம் பெறும் போது,
அவஸ்யம் அறிவரும் உண்மையும் ஸத்தியம்

பர சொரூப / பாறையின் நிழலானது,
அதாவது, மாயாவானது, உளி சக்தியால்
ஆன நிலையில், அப்பாறைகளுக்கு, நாமரூபம்
கொடுத்தது என கொள்ள வேண்டும்.
பாறைகள் ஆன நிலையில், அது தோற்றமே.
அது உளி சக்தியவால், இங்கு மாயாவும் &
மனமும் / இணைகிறது என பொருள் கொள்ள வேண்டும்
நாமரூபம் / பெறும் போது, நாமரூப, ஜக ஜீவ,
வடிவம் / பெறுகிறது என கொள்ள வேண்டும்.
தன்னால் உண்டாக்கப்பட்ட நாமரூபங்களில் /
தாமே மோஹம் கொண்டு, அந்த ஜீவகர்த்தத்துவத்தால் /
அம்மனமே, புண்ணிய பாபங்களை உண்டுபண்ணி,
" ஜனனமரண சுழற்சியில், தாமே
மாட்டிக் கொள்கிறது, என உணர வேண்டும்.




இதில் கூறிய, மூன்றின் தோற்றம் (26) இல்லாமல், எந்த நாம ரூபமும் இல்லை. ஆனால் அந்த நாம ரூபங்களும் இன்ப துன்ப குண தோஷம் மூடிக்கப்பட்ட தன்மையால். அலைகள் வந்த தோற்றம், மறைபடுகிறது ஏனெனார்

தோற்றம் உள்ள மூன்று மண் மலை! ஜலம்! தாவரம்! ஆகிய மூன்றும்

முன் கூறிய, மூன்றின் நிலையில், தோற்றம் பெறும் போது, அது இயற்கை ஆகும். அதுவே மனிதால்! நாம ரூபம்! பெறும் போது, செயற்கை ஆகும். முந்தையதில், குண தோஷம் இல்லவே இல்லை. பிந்தையதில், குண தோஷ பேதம் பின்னிவிடுகிறது. இதன் காரணம், தேவை & ஆசை! ஆசை & தேவை! என்ற நிலையில், ஜீவசுதந்திரம்! ஆகும் என, உணர வேண்டும்.

இயற்கையே இறைவன் வடிவம் என்றும், அதுவே, இறைவனின் செயலாக திகழ்கிறது என்றும், பொருள் கொள்ளலாம். மனிதால்! உண்டு பண்ணப்பட்ட, நாமரூபங்கள்! அனைத்தும், மனதின் செயலான, ஜீவ செயல் என்றும். அதுவே கர்மாவின் தனி! என்றும். ஜனன மரண வழி, என்றும் கொள்ளல் வேண்டும்.



ஆனால் அந்த நாமரூபங்கள்
மாறுகின்றது. (27)
மறைகின்றது.
அவை புதிய நாமரூபமாகத்
தோன்றுகிறது. இவ்வ
எல்லாம் மனதின் மாற்றமே
நாமரூபம் மாறி மறைந்தாலும் அதன் இணை
தோற்றம் மனதின் மூலமாக பிறவியை தொடுக்கிறது.

இனி உங்கள் கேள்விகளுக்கு விடையாவது:-

கேள்வி:- நாமரூப, ஜகத்திற்கும்! காலாதீத பரத்திற்கும்! ஒற்றுமை? வேற்றுமை என்ன?

பதில்:- இதன் சுருக்கமான பதில் உணர்.

மாம்பழங்கள் என்ற நிலையில், ஓர் மேஜையின் மீது, பலரக பழங்கள்! பரவலாக பரப்பி வைக்கப் பட்டிருப்பது, நாமரூப, ஜக, ஜீவ, தோற்றம் ஆகும்.

அவைகளின் மதுர சுவை! என்பது காண முடியாது, ஆனால் சுவைத்து உணரக் கூடியதான, ஓர் சதானந்தம். அவற்றினுள் அதிசூட்சமமாய்! மறைந்திருக்கிறது ↑ ஸத்தியம் என கொள்ள வேண்டும்.

இப்போது?

(A) பழங்களாக (நாமரூபங்களாக) கண்டால், மதுரமும் ஆனந்தமும் பெற முடியாது.



பழங்களை கடித்து சுவைத்தால்தான், (28)
மதுரமான சுவை
தோன்றும். பழம்
தோன்றிக் கொண்டே
இருந்தால், மதுரமான சுவை தோன்றாது.


(B) மதுரமும்! சுகானந்தமும்! பெற வேண்டுமானால்,
பழங்களை என்ற, நாமரூபம் கெட்டழிய வேண்டும்.

பழம்! தோன்றினால், சுவை தோன்றாது.
சுவை! தோன்றினால், நாமரூபம் இருக்காது.

ஆனால்?

(A) பழமே சுவை! சுவையே பழம்! ஆகும்.
(A) ஒற்றுமை.
ஆனால், (B) நாமரூபம் பழம் ஆகாது.
(B) வேற்றுமை.
பழம் நாமரூபமாகாது. அப்பழத்தை,
சுட்டிக்காட்ட வந்த, ஓர் உபசார வாசகமே
நாமரூபம்! ஆகும் என உணர வேண்டும்.

அதேபோல்!
பரம் என்பது இருப்பை மட்டும் உடையது.
அது மின்சாரம் போன்று, தோற்றம் இல்லாதது.
ஆனால், அம்மின்சாரம்! பல்பு! T.V.! மிக்ஸி!
கிரைண்டர்! என்ற நாமரூபமாக தோற்றப்படுகிறது.



பழத்தின் நாமரூபம்
எப்போ அழி (29)
கிறதோ அந்த
விநாடியே, சுவை தோற்
றும். அதே போல், உன்
மனதால் தோன்றிய
நாமரூப ஜகத் ஜீவ தோற்றங்கள்/மறைந்து
மறுவிநாடி, எல்லாம் பரமாக உணர முடியும்.

ஆனால், கண்ணால் தோற்றமளிக்கும், நாமரூப
வஸ்துக்களின் வழியாக, அம்மின்சாரம்
தன் இருப்பை, காட்டிக் கொள்கிறது என,
பொருள் கொள்ள வேண்டும். ஆகவே?

(A) மேலே சொன்ன, அந்நாமரூப பொருள்கள் !
மின்சாரம் ஆகாது. (பிரகாசிக்காது)


(B) அப்பொருள்கள் இல்லாமல், மின்சாரம் ↑
இருந்தும் இல்லாததே.

(C) மின்சாரம் இல்லாமல், அப்பொருள்கள்
இருந்தாலும், அது வீணே. (இல்லாததாகும்)

இது நாமரூப/மயக்கத்தின் நிமித்தம், சொல்லும் உதாரணம்
ஆகும்.

மற்றோர் உதாரணம்.

மண் இல்லாமல், பாண்டங்கள் இல்லை. ஆனால்?
மண்ணில் அப்பாண்டங்கள் இல்லை. என்பது
பிரமாணம் உண்மையாகும்.



தோற்றம் என்பது, (ஓ0)
ஓர் தோற்றமும்
அதன் நிரந்தர
இருப்பும் என அறிக.
நாமரூபம் என்பது
தோற்றமும், நாமரூப
இருப்பின் மாற்றமும், அது உபயோகப்படும்
தன்மையும் அதாவது குணமும் என அறிக.

மண்ணே பாண்டம் / பாண்டமே மண் / இது ஒற்றுமை.

மண்ணில் பாண்டம் இல்லை. பாண்டம் தோற்றும்
வரை, மண் தோற்றுவதில்லை. இது வேற்றுமை.


பரத்தை மறைத்தது பார் முதல் பூதம்.
(நாமரூபம் / தோற்றும் வரை பரம் தோற்றாது)

பரத்தில் மறைந்தது, பார் முதல் பூதம்.

(நாமரூப ஜகத் ஜீவ பரம் அனைத்தையும்,
பரமாக உணர்ந்து விட்டால் (காண முடியாது)
நாமரூப ஜகத் ஜீவ பரம் தோற்றுது (அங்கு பரம் தெய்வத்தை மறைக்கிறது)

காண்பதை நம்புவது மனம் / காணாததை உணர்வது அறிவு
இவ்விரண்டில் மனம் வேற்றுமை / அறிவு ஒற்றுமை /


அடுத்த கேள்வி :- நாமரூபம் தானே அழிந்துவிடுமா?
(A) நாமரூபம் / வந்த விதம் என்ன?
(B) வந்த நாமரூபம் / அழியும் அல்லது அழிக்கப்படுமா என்றால்?





பதில்:— ஆத்மானந்த குழந்தைகளே! இதில் ஓர் உதாரணக் கதை! அப்புறம் விளக்கமும்! பதிலும்! வரும். கருத்துடன் கேட்பீர்களாக.

சமுத்திரத்தின்! நீர் ஆவியாகி பூமியிலும் மலைகளிலும் வருஷிக்கிறது. அது மழை என்று பேசப்படுகிறது. இங்கு சமுத்திரமும் மழையும்! ஜலம்! என்ற ஓர் தோற்றமே! நாமரூபம் இரண்டு. ஆனால் அம்மழை ஜலம் ஆறு! நதி! எனப் பெருகி வரும் போது, புனித நதி (தீர்த்தம்) நாமம் வழங்கப்படுகிறது.

இப்போது கடும் மழை பெய்தால், பிரளயம் போல், வெள்ளம் பெருக்கெடுத்து, கிராமங்களையும்! ஆடுமாடு பறவை போன்ற உயிரினங்களையும் மரம் செடி குடிசைகளையும்! அடித்து இழுத்துச் சென்று சமுத்திரத்தில் பெருத்த ஆரவாரத்துடன், உள்ளே புகும் போது (சமுத்திர ஜலம் உப்பு! மழை





(நதி) ஜீவம் சுத்தம் சமுத்திரம்! அம் பெரு
வெள்ளத்தை தடை செய்யாது.
,, எதிர்த்து மறிக்காது.
,, நீ வேறு! யாம் வேறு! என ஒதுக்காது.
,, அமைதியாக ஆனந்தமாக எச்
சலனமும் இல்லாமல், தாம் தம் வழிதிறந்து
உள்ளே பல ஜீவிகள்! செல்ல அனுமதிக்கும்.
நதி ஜீவம்! உள்ளே சென்றவுடன், அதை
தாம் அன்புடன் அரவணைத்து, தாம் அந்த
நதி (சுத்த) ஜீவத்தை, விழுங்கி விடும்.
அதாவது **இரண்டற** கலந்து விடும்
,, நதி ஜீவத்தை காணவோ! சுத்த ஜீவமாக உணரவோ!
இனி முடியாத நிலையில், எல்லாமே சமுத்திர
ஜீவ (உருப்) மயமாகி விடும் என அறிக.



மற்றோர் மார்க்கம்
ஞானமார்க்கம். (ஓ)
ஆகும். எளிதாம்
மண்ணோ! எதுவும்
மண்ணுக்கு அன்னிய
மில்லை என்ற, திட
உணர்வு இருந்தால், இந்த
நாமரூபம் அனித்தியம் அவை நாசமாகும்.
இது பிரம்மமார்க்கமாம் ஆகும்.

இத்துடன், இன்றொரு பேருண்மை, என்னவென்றால்,
பிரளய பெருவெள்ளம், அழித்துக் கொண்டு
வந்த, அனித்த நாமரூபங்களையும் (உயிர்
உள்ளவர்து! ஜடசொரூபம்/ தாவரங்கள்!
மற்றும், அனைத்து ரூபமை கூடாங்களையும்)
ஓர் அணுப்பிரமாணமும், நாம் ஏற்காமல்,
நம் அனுக்கிரகங்களால் (அவிகாரல்)

தட்டி, தட்டி. தட்டி. தட்டி. தட்டி. தட்டி
கரையில் ஒதுக்கிவிடும். இதன் பொருள்
என்னவென்றால்:— ஜீவமாகிய நீ எம்!
வசமும் எம்! அம்சமும்/ ஆவாய். ஆனால்
நாமரூபம்/ இரண்டும் நம் இருவருக்கும்
வேண்டாம். அதனால் பெரும் (பிறவித்
தொல்லை. நாம் இருவரும் ஒருவரே/ இருவரல்ல/
பிரம்மானந்தமே நம் வழியாம்
என்பதாகும்.



எந்த நாமரூபமும் (34)
நாமாகத்
தோன்றவில்லை.
தேவை & ஆசை!
ஆசை & தேவை!
இவைகளின் ஜீவமாக
அஹங்கார & மமகார! ஜீவகர்த்தத்து
தோன்றியதாகும்.
வத்தாரி


இதன் உட்கருத்து

(A) நாமரூபமே! பெரும் தடையாகும். அது
மாயாமனதின்! இன்ப துன்ப கற்பனையாகும்.
அந்த இன்ப துன்பமே! புண்ணியபாவம்! ஆகும்.
அப்புண்ணிய பாவமே! ஜனனமரணம்! ஆகும்.

ஆகவே?

(B) நாமரூபங்களை! இல்லையென, கெடுத்தாலே போதும்
இந்த நாமரூபம்! வந்த விதம் மாயாவின்?
இயற்கையை! மனதின் செயற்கையாக்கிய தே
காரணம் ஆகும்.

(C) அச்செயற்கையான்! நாமரூப கற்பனையை!
நான்! என்னவே! எனது! என்ற ஜீவ
கர்த்தத்துவக்காரர்! அறிந்த தே புண்ணிய பாவம்
என்ற, ஜனனமரணம் என்று, உணர்ந்தால் போதும்
இச் ஜீவகர்த்தத்துவம்! அழிந்து கெட வேண்டுமானால்



உலக நியதியில், (35)
நாம ரூப!
சம்பந்த! மானதை
தனை விட்டுவிட்டால்
மறுகணமே உன்
உபாசனா மூர்த்தி
அப்யாஸத்தை கொடுக்க
காத்துக் கொண்டிருக்கிறேன் என்றும் அன்புவாக.
உன் நம்பிக்கையே! உன் பரிபாலன்.

(D) சர்வார்ப்பணம்! என்ற அத்வைத தத்துவம்! மேலோங்க வேண்டும்.

(E) நாமரூபம்/வந்த விதம் :- எந்த நாமரூபமும் தாமாக தோன்றவில்லை, என்பதே ஸத்தியம்.

தேவை & ஆசை! ஆசை & தேவை! என பழக்க & வழக்க தோஷ குணத்தாலும் (பேச்சு) (செய்கை)

நாமரூபங்களை விட்டால், என்ன ஆகுமோ?

" " நாம் என்ன ஆவோமோ ?

தொழில் ?

" " நம் வாழ்க்கை என்ன ஆகுமோ?


கௌரவம்

" " மதிப்பு மரியாதை " " ?

" " உலகம் நம்மை கைவிட்டுவிடுமோ?

" " உறவு/சுற்றம்/நட்பு " " ?

" " பட்டம்/பணம்/பதவி " " ?



அம்மனம் ஓ
உன் வசம்
தான் இருந்தது:-
இது குழந்தை
பருவம் ஆகும்.
பழக்க வழக்க
தோஷத்தால் மனம்
மாட்டிக் கொண்டதை நான் மாட்டிக்
கொண்டேன் என எண்ணுகிறாய்.
நாமரூபங்கள் வந்த நிலையாகும்
என்ற சந்தேக, கலக்க பய நிலையில்,
நாமரூபங்களை விட முடியவில்லை என அறிக.

(F) நாமரூபங்களை (அழியும்) அழிக்கும் நிலை:-


இதில் ஓர் உண்மையை, அனைவரும் உணர வேண்டும்.

(1) நாமரூபம் வந்த காரணம் ஏதாவது? என்ன காரண காரியம் என, முதலில் தெரிந்து கொள்ள வேண்டும்.


(2) நாமரூபம், என்ன செய்கிறது என ஆழ்ந்து உணர வேண்டும்.

(3) நாமரூபத்தை, எப்படி? எதனால்? அழித்து முடியும் என, முடிவு எடுக்க வேண்டும். அப்படி பார்த்தால், நாமரூபம் அழியும், அழிக்கவும், முடியும் என உணர்க. இனி விளக்கம் கீழே காண்க.

(1) ஜக ஜீவ சிருஷ்டி, மாயா உடையதாகும். அதாவது, மாயாவை உடைய ஸ்ரீபகவானுடையதாகும். இப்பகவான், தம் அம்ச மனிதனிடம், இயற்கையின் சொரூபத்தை மட்டும் காட்டி தொடர்ந்தே




இவ்வுலக, இயற்கையின் சிருஷ்டி எம்முடையதே!
நீ நன்றாக விளையாடவாம். உன் விளையாட்டின்
துணையாக, எம்முடைய மாயா! அம்சமனைத்தையும்
உனக்கு கொடுக்கிறோம். இம்மனதை வைத்து,
இச் ஜட சொரூபங்களால், விளையாடுவாயாக.
உண்மை உரிமை வேண்டாம்
யாம் உன்னுடனே, உன் அருகிலேயே, இருப்போம்.
எப்போது வேண்டுமானாலும், நீ எம்மை அழைக்கலாம்
விளையாட்டை **விட்டுவிட்டு**
எம்மை, அழைத்தால்தான், எம்மை நீ காணமுடியும்.
விளையாட்டின் ரஸனையில் மயங்கிய நிலையில்,
எம்மை அழைக்காமல் விளையாட்டு பொருள்களில்
மாட்டிய நிலையிலும்; எம்மை அழைக்காமலும்,



நாம ரூபத்தை (39)
கண்டால்
எம்மை காணமுடியாது
அந்த நாம ரூபத்தை
எம் இருப்பை உணர்ந்தால்
நாம ரூபம் தெரியாது.
ஏதேனும் ஒன்றைத்தான்
நீ காண முடியும். நாம ரூபத்தையும் எம்மையும்
ஒரே காலத்தில் காண முடியாது என்பதே சத்தியம்.

எம்மை நீ காண முடியாது. காரணம் நம்!
மாயாவின் மனமானது, உலகம்! உறவு! உடல்!
பொருள்! இவைகளை கண்டால் எம்மை காண முடியாது.
எம்மை உண்டு என, சத்தியமாக உணர்ந்து நம்பி
விட்டால், மேலே சொன்னவை எவையும் உனக்கு தெரியாது.
என சொல்லிய ஸ்ரீமகவான்! உலகையும்! அந்த
பொருள்களையும்! மனதையும்! உன்னிடம்
கொடுத்து விட்டு, உன் முன் தூலமாகவும்
நிற்கிறேன். உன் இதயவாசியாகவும்
இருக்கிறேன். நாம ரூப மயக்கத்தால் அதை உணர முடியவில்லை
ஆரம்பத்தில் அம்மனம்! உன் வசம்தான்
இருந்தது. காலம் செல்லச் செல்ல அம்மனம்
உன்னை சூழ்ந்து கொண்டது. அதன் காரணம்—
தேவை & ஆசை! ஆசை & தேவை! என்ற
நிலையால், தோஷ குணங்கள் என்ற மனவலையில்
சிக்கிக் கொண்டது. மனதோடு ஒன்றிய நீ
அதே அவஸ்தையை, உன் அவஸ்தையாக பாவித்து செய்கிறாய்.



ஸ்ரீபகவான் 39
உன் முன்
தாவமாக நிற்கிறேன்
என்றாலும், அனைத்து
நாமரூப வேஷங்களை
யும் தாங்கி அதனதன்
வினையின்படி, பாரபட்சம் தோஷமில்லாமல்
வினைகளை, நடித்து கழிக்கிறேன் என உணர்.

ஆகவே நாமரூபம் என்பது உண்மையல்ல
வந்ததே தவிர, ஸ்ரீபகவானால் உண்டாகவில்லை
என உணர்வாயாக. உன் மனதின்
நுகர்ச்சியின் மோக வேகம் உண்மையல்ல
உண்டான நாமரூபங்களை மறக்கவும்
மறுக்கவும் முடியாமல் தவிக்கிறதை உணர்.
இ நாமரூபம் என்ன செய்கிறதென்று
ஆழ்ந்து கவனித்தால் ??????????
அரிப்பெடுக்கின்ற படையை (வியாதியை)
போல் திரும்ப திரும்ப, மோக போக வேகத்
தை உண்டுபண்ண, பிறவி நோயை உண்டு
பண்ணக்கூடும் அவஸ்தையை உண்டுபண்ணுகிறது.
இங்கு சர்வாரம்பணம் ஒன்று தான், அந்த
நாமரூபங்களை தெருத்து பிறவி நோயை
நாசம் செய்யும் என, முழுமையாக உணர்ந்து
நிலையில், செயல்பட வேண்டும்.



(40) அங்கு உண்மையும், நாமரூப தோற்றத்தினையும் ஜீவ கர்த்தத்துவத்தினையும் இரு மயங்கி, தன்னதாக பாவனை செய்வதாலே, அந்த அவ்வறிவியாமை என அறி.

(3) நாமரூபத்தை எப்படி எதனால் அழிக்க முடியும் என்றால்?

தேவைகளையும், ஆசைகளையும், குறைப்பாயாக.

போக்குவரவையும், கொடுக்கல் வாங்கலையும், எந்த அளவுக்கு குறைக்க முடியுமோ, அந்த அளவுக்கு, குறைப்பாயாக.


வாக்கில் கவனம் வை.

அனைத்து நாமரூபங்களும் மண்ணே! என உறுதி செய்.

இவைநான்கும், நாமரூபங்களை அழிக்கும் பிரம்மாஸ்திரம்! என உணர்வாயாக.

ஓர் உண்மை!

நாமரூப மயக்கம், எப்படி மயக்குகிறது என்றால்? கல்! மண்! ஜலம்! இம்மூன்றும் இணைந்ததே, சுவர் ஆகும். அதை, வெறுமனே சுவர் எனச் சொல்லும் போது அது தோற்றம் ஒன்றே. அங்கு எந்த நாமரூப குணதோஷமும் இல்லை.



போக்குவரவை
குறைத்தால்
நிறுத்த முடியாதும்
நிறுத்த கூடாதும்
கொடுக்கல் & வாங்கல்
குறையும். ஆனால் நீ
முடியும்.
ஒன்று வந்த, வினை மட்டுமே
தொடராது இது உறுதி.
வேறு எந்த வினையும்,

41

அதே சுவரை, களி மண் சுவர்! கல் சுவர்! மதில் சுவர்! கோட்டை சுவர்! தடுப்புச் சுவர்! கட்டமண்! காம்பவுண்டு சுவர்! கைப்பிடிச் சுவர்! பல பல என இன்னமும், பல நிலைகளில், நாமரூபம் வைத்து அழைக்கும் போது, நாமரூபம் விரிவடைந்து விகாரம் அடைகிறது. அதனால், ஒவ்வொன்றுக்கும், அது பயன்படும் விதத்தில், குண தோஷம் பின்னவிடுகிறது. ஆனால், இருப்பதோ கல்லும் மண்ணும் தான். ஒட்டு மொத்தத்தில், மண்ணுக்கு அன்னியமில்லை. இதே போல், ஒவ்வொரு பொருளையும், நாமரூப பேதத்தாலும், நான்! என்னால்! எனது! என்ற ஜீவ கர்த்தத்துவ தோஷ குணத்தாலும், இணைத்து பிணையும் போது, இன்ப துன்ப! புண்ணிய பாப! பிறவி நோய்! பரவி விடுகிறது என அறிக.



இ


என்னுடையது! (42)
என்னுடையவன்!
என்னுடையவர்!
என இம் மூன் றும்;
இனக் கவர்ச்சி! என
ஸ்ரீமஹான்கள் சொல்வர். அது எவ்வாறு
போன்று, மறை அமாயம் உள்ளதாகும்.

நாமரூப மயக்கத்தை விட்டொழி

கவனம் தேவை:- அண்ணா தம்பி! அக்கா தங்கை! மாமா மைத்துனன்! சித்தப்பா பெரியப்பா! தாத்தா பாட்டி! பேரன் பேத்தி! இப்படியாக நாமரூபத் தோடு, சொந்தம் கொண்டாடி! சொந்தத்தால் பந்தமும்! பந்தத்தால் பாசமும்! பாசத்தால் விருப்பு வெறுப்பும்! விருப்பு வெறுப்பால்! அனேக

குணங்கள் தோஷங்களும்

பின்னிப் பிணைந்து உங்களை படாத பாடு படுத்துவதை, ஏன் உங்களால் உணர முடியவில்லை? காலம் விரயமாவதை, உணர முடியவில்லையா? வினைகளின் அழுத்தம், சுகமாக இருக்கிறதா? இன்ப துன்ப போதையில், சிக்கி மயங்கி இருக்கும் உங்களுக்கு, ஓர் உண்மையை தருகிறோம் உணர்க.



நாமரூப தடையின்
காரணம் :- பூ
நாம ரூபம் தோன்றும்
போது, அதன் இயக்க
குணதோஷம் தோன்றும்.
அதனால் புண்ணியபாப
விளையும், அவ்வினையால் பிறவிப்
பிணியும் இயல்பாகவே உண்டாகி விடுகிறது.

எல்லாம் மாமிச பிண்டம் தானே?
" மண் பொம்மைகள் தானே?
" புண்ணிய பாப வினைக்கேடு தானே?
" கணக்கு முடிக்க வந்த கூட்டம் தானே?
" அவரவர் வினைக்கு, அவரவர் தானே பொறுப்பு?
" ஒருவர் வினையை, ஒருவர் ஏற்க முடியாது தானே?
" ஒருநாள் கூடும், சந்தைக் கூட்டம் தானே?
" மற்றவரை, தீர்க்க வந்தவர்கள் தானே?
" அவரவர் மனதின் இன்ப துன்ப நுகர்ச்சி தானே?
" ஒருவர் கஷ்டநஷ்டத்திற்கு மற்றொருவர் பொறுப்பில்லை தானே?

ஆகவே?
ஒருவரை, ஒருவர், கண்டு கொள்ளாமலும், ஒருவரை, ஒருவர், கண்டிக்காமலும் எல்லாம் அவன் செயலே! நம் செயலொன்றுமில்லையென சும்மாவே சுகமாகவே இருக்கலாமே?



நாமரூப நினைப்பே
சொந்தபந்தபாச
நினைப்பும்! காம
மோஹ! த்வேஷ! ஆவேச
குணதோஷங்களும்
புண்ணியபாப நினைப்பும்
பிறவிப் பிணியுமாக,
அமைந்த இருவகையால் எல்லாம்
மண்ணே என உணருங்கள். வேறு எந்த
சாதனையும் இல்லை. தேவையும் இல்லை.

நாமரூப மயக்கத்தை விட்டால், மறுகணம்!

" அதனையும் உணர முடியும். "

" உங்களையும், அதனை உணர முடியும். "

" உங்கள் விதி, பரிபாகப்பட்டு விடும். "

" பிரம்மார்ப்பணம்! அனுபவமாகி விடும். "

" எல்லாம் மண் பொம்மைகளாகும். "

" மண் மயமே ஆகும். "


" ஸ்வயம் ஜோதியாக உணர முடியும். "

# நீங்களே அதுவாகவும்
# அதுவே நீங்களாகவும்!!

ஆக பிரகாசிப்பீர்கள்!!!


இது சத்தியம்! இது சத்தியம்! இது சத்தியம்!

தி பாபா.



# உ சேவையும் ஆசியும்


மற்றொரு அன்பர் :— ஹே அன்பானா! அறிவானா! எளிமையானா! பொறுமையானா! பணிவானா! பாபாஜி! உங்கள் விளக்கம், அதிமதுரமாகவும்! உடனே ஜீரணமாகி, பலம் தருவதாகவும் இருக்கிறது. இப்படி, அரிய பெரிய கருத்துக்களை, எளிமையாகவும் இனிமையாகவும்! உடனே உணரும் நிலையிலும்! தரவல்லவோர், தற்காலிகமாக, எவரும் இல்லை என்றே சொல்லுவோம். இப்படி இவர் பேசிக் கொண்டிருக்கும் போதே, மேலும் மூவர் யோகிகள் அங்கு வந்து சேர்ந்தனர். வந்தவர்கள் மூவரும் இணைந்த குரலில் பிரணாம் பாபாஜி! என்றார்கள். அப்பைத்தியமோ! மறுமொழியாக, நாராயணா! நாராயணா! நாராயணா! எனக் கூறிக் கொண்டே, அம் மூவரின் திருவடிகளிலும், நமஸ்காரம் செய்து, அவர்கள் ஸ்ரீபாத தூளியை! தம் சிரம் மேல், தாங்கிக் கொண்டது.



இன்றைய மனம் (46)

படைத்த மனிதன்!
மண்ணாகிய பணத்தை
வைத்துக் கொண்டு,
தம் தேவைகளை பூர்த்தி
செய்து கொள்கிறான்.
பணம் இருந்தால் போதும் அனைத்தையும்
சாதித்து விடுவேன் என்று மார் தட்டுகிறான்.


வந்தவர்களில் ஒருவர் — பார்த்தீர்களா மஹாத்மாக்களே! நாம் அனைவரும்! நின்ற நிலையில்! தலை வணங்காமல்! கைகளையும் கூப்பாமல்! பிரணாம் செய்கிறோம். ஆனால் இந்த பாமரனோ! நம் அனைவர் திருவடிகளிலும், பணிந்து ஸ்பரிசித்து நம்பாத தாஸியை! அவர் சிரசில் தாங்கிக் கொண்டார். இங்குள்ள, அனைவரும் சொல்வதைக் கேள்விப்படுகிறோம். ஆனால் இன்று, இவருக்கு நேராகவே, காண்கிறோம். பணிவின் பாமரா! என்றால், இவர் ஒருவர் தான். நம் அனைவரின் கண்களையும்! நாம் கற்ற வித்தை! கண்களை மறைக்கிறது. அகந்தை, உடலும்! உள்ளமும்! பணிய மறுக்கிறது. அம்மைத்தியத்தை பார்த்து இது எப்படி உம்மால் முடிகிறது? எங்கள் அனைவர்களையும் விட, அனுபவத்தில் முதிர்ந்தவர். வயதல்ல! வித்தையல்ல! வேத சாஸ்திரமல்ல! அனுபவ ஞான நடப்பிறக்குன் என கேள்விப்படுகிறேன்




வந்தவரில் ஒருவர்:- ஆமாம் மாமாஜீ!
ஏன் கேள்வி? எங்கள் அனைவரிடமும், நாங்கள்
கற்ற வித்வத்வம் தானே நிறைந்திருக்கிறது?
எங்களிடம் பணிவு! பொறுமை! அமைதி!
இல்லையே. எங்களிடம், எதை ஆதாரமாக
கொண்டு, இப்படி பணிகிறீர்?


வைத்தியம்:- ரொம்ப அருமை மஹராஜ்மாஜீ!
பணிவே பாதையாக கொண்டு! அனுபவம்
பெற்று வந்ததால், இன்றி பொறுமையடிகிறது.
மேலும் உங்கள் அனைவரிடமும், யாம் காண்பது:-
இயக்க நிலையில், ஸ்ரீபகவானை காண்கிறோம்.
இயக்கமற்ற நிலையில், ஸ்ரீபரம் பொருளாக
உணர்கிறோம். (இங்கு காட்சி இல்லை)

உதாரணம்:- ஜவ்வாதை காண்கிறோம். ஜவ்வாதில்
மறைந்து சுவை அனுபவமாயிருக்கும், உப்பை!
உணர்வால் உணர்கிறோம்.




மனம் இறக்க (48)
கற்றாலும்
ஸித்தி எவ்வாம்
பெற்றாலும், மனம்
இறக்கக் கல்லார்க்கு
வாயேன் (வாய்க்காது)
பராபரக் கண்ணியில், எம்
பராபரமே என,
ஸ்ரீ தாயுமானவர், சொன்னது போல்,

வைத்தியம் :- உங்கள் வித்தை யெவ்வாம்
சொத்தை தானே? (அஸத்து தானே?) உடனே
வந்த ஒருவருக்கு, வேகம் பொங்கி எழுந்தது.
என்ன சொன்னாய் பாமா? எங்கள் வித்தை,
சொத்தையா? பல ஆயிரம் வருஷம் கடும்
சாதனை செய்து, அபூர்வ சக்திகளை கைவரப்
பெற்றிருக்கிறோம். அதை யெவ்வாம் வித்தை
என்கிறீரா?
வைத்தியம் :- ஓ மஹாத்மா, அவ் வித்தை
என்னவோ?
அந்த ஸ்ரீமஹாத்மா :- காட்டு மிருகங் களாகிய
யானை, சிங்கம், புலி, கரடி, போன்ற சகல துஷ்ட
மிருகங்களும், பூனை போன்று, என்னைச் சுற்றி
சுற்றி வரும். அவற்றின் மீது, அவரோகணம்
(சவாரி) செய்து ஆனந்தமாக, சஞ்சாரம்
செய்வேன். கரை காண முடியாத, எந்த





ஆழமான நதியிலும், அனாயசமாக
பாதத்தில் ஈரம்படாமல், நடந்து செல்வேன்.
ஆகாயமார்க்கமாக, (ககனமார்க்கமாக)
கண்டம் விட்டு, கண்டம் பறந்து செல்வேன்.
தேவையான பொருளை, நானே சிருஷ்டித்துக்
கொள்வேன். (வைத்தியம் இடைமறித்தது)
வைத்தியம் :- பைசா (பணம்)
கொடுத்தால், ஓடத்தில் (காலில் ஈரம்படாமல்) நதியை கடந்து விடலாம்.
தேவையான பொருட்களையும், வாங்கி விடலாம்.
ஆகாய விமானத்தில், பறந்து சென்று,
குறிப்பிட்ட இடத்தை, அடைந்து விடலாம்.
அப்படியானால், உங்கள் வித்தைகள், அனைத்தும்
பணத்தில் (கவி தோஷத்தில்) அடங்கி
விடுகிறது. மிருகங்கள் / அடங்கும் என்றும்,



அபூர்வ சக்திகளை (50)
ஸித்திகளாக
பெறும் போது அது
மனமும்! வாயுவும்!
இணைந்து செயல்பட்டு
அனுபவம் பெறும்போது
நான் செய்தேன்.
என்றால் தான் முடிந்தது.
என்ற அகங்காரம்! அதிகாரம்! ஆதிக்கம்!
பலமாக வேரூன்றி விருட்சம் ஆகிவிடுகிறது.

அதன் மீது, அவரோகணம் செய்வேன்
என்றும், சொன்னீர்கள். மதம் கொண்ட யானை
மீதும்! சீறிப்பாயும் சிங்கத்தின் மீதும்!
அதன் சிரசில் ஓம்! அமர்ந்து
கம்பீரமாக, பயணம் செய்கிறதே அந்த ஈ.
எந்த சக்தியை பெற்றது? எந்த ஸித்தியை
பெற்றது? தாங்கள் சாதனையால், யாருக்கு
என்ன பிரயோஜனம்? உங்களுக்கே பி
ரயோஜனம் இல்லை. பிறருக்கும் பிரயோஜனமில்லை
சிங்கத்தை அடக்கினேன் என்கிறீர்களே! உங்க
ளால் எழும், சீறிப்பாயும் சீற்றத்தை அடக்கி
னீர்களா? மதம் கொண்ட யானையை! அடக்க
முடியும் என்கிறீர்களே! உங்களால் மதம் கொண்
டலையும், போட்டி பொறாமை! என்னும் யானையை,
அடக்கிவிட்டீர்களா? உங்களுள் உள்ள
மிருகங்களை! அடக்காமல் ஜடத்தை அடக்கி
என்ன பிரயோஜனம்???




Abode of Love

You Are Everything!